திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு 8 இடங்களில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு கால்நடை நோய் ஆய்வுப் பிரிவை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் புலனாய்வுப் பிரிவு வல்லுநர்கள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படுமா என்பது. அப்படி ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்தால் அதனை கும்பகோணத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் ஆய்வுப் பிரிவு அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரைசரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 6ஆவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.